**தேயிலை சக்தி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை – 2023**

---

தேயிலை சக்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலயமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் அடங்குகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் ஒன்று தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**2 கணக்காய்வு அவதானிப்புகள்**

**2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 3 மற்றும் நிதிப் பிரமாணம் 877(2)ஈ பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்று கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் செயலாற்றுகை அறிக்கையொன்றுடன் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஆண்டு முதல் 2023 இறுதி வரையான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி அளவிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளமை**

நிதியத்தினால் இறுதியாக தயாரித்து சமர்ப்பித்திருந்த 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் தொடர்பாக விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **விடயம்** | **பெறுமதி (ரூபா)** |
| --- | --- |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 330,180,601 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 336,013,484 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **666,194,085** |
| உரிமை | 65,649,484 |

| | |
|---|---|
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 361,756,280 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 238,788,321 |
| **உரிமை மற்றும் மொத்தப் பொறுப்புகள்** | **666,194,085** |
| மொத்த வருமானம் | 225.624,996 |
| மொத்தச் செலவு | 41,159,092 |
| **இலாபம்** | **184,465,904** |

## 2.3 நிதியத்தின் செயற்பாடுகள்

தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமாக 12 தொழிற்சாலைகள், மாவரல தோட்டம் மற்றும் ஹொரணை உரக் களஞ்சியம் காணப்பட்டதுடன், அவற்றின் முகாமைத்துவம் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அணுகியிருந்த குத்தகை உடன்படிக்கையின் படி மாவரல தோட்டம் மற்றும் 07 தொழிற்சாலைகளில் இருந்து 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த குத்தகைத் தொகை ரூபா 120,418,779 தொகையாகும். 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை நிதியம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், நிதியத்தின் உரிமை மூலதனமும் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. அதன்படி, 2012 ஆண்டில் ரூபா 124.058 மில்லியன் தொகையாக காணப்பட்ட உரிமை மூலதனம் 2015 ஆண்டின் போது ரூபா 111.65 மில்லியனிற்கான மறைப் பெறுமதியாக மாறியிருந்தது. இந்த நிலைமையின் மீது 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-I இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மற்றும் 2016 ஆகஸ்ட் 17 திகதிய அமப/16/1427/726/015-II இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் அலுவல்கள் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளருக்கு சாட்டப்பட்டு நிதியத்தை மீள்கட்டமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதேபோல், 2023 ஏப்ரல் 18 திகதிய அமப/23/0615/616/014 இலக்கம் கொண்ட "தேயிலை சக்தி நிதியத்தின் பங்குரிமையாளர்களிடம் தேயிலை சக்தி நிதியத்திற்கு பங்குகளை திருப்ப கொள்வனவு செய்தல்" என்ற தலைப்பில் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க தேயிலை சக்தி நிதியத்தின் பங்குகளின் உரிமையாளர்களுக்காக பங்கொன்றின் பெயரளவுப் பெறுமதியாகிய ரூபா 10 தொகையை திருப்பிச் செலுத்தி குறிப்பிட்ட பங்குகளின் உரிமையை தேயிலை சக்தி நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அதற்காக தேயிலை சக்தி நிதியத்தின் உழைப்புக்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகை உடன்படிக்கையின் படி செலுத்த வேண்டிய மாதாந்த குத்தகை தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாம் நாள் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாமையால் தாமடையும் ஒவ்வொரு நாட்களுக்கும் குத்தகைத் தொகையில் 1 சதவீத தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குத்தகை தொகையை செலுத்தாமையால் தாமதக் கட்டணமாக ரூபா 1,503,860,053 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது எனவும் மற்றும் புதிய அமைச்சரவை | ஒரு நாளைக்கு 1% வீதம் அறவிடப்படுகின்ற தாமதக் கட்டணத் தொகை மிகவும் கூடிய பெறுமதியாக காணப்படுவதால் குறிப்பிட்ட தாமதக் கட்டணத்தை வருடத்திற்கு 10% வீதம் என திருத்துவதற்காக தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள தாமதக் கட்டணம் குறைவடைய உள்ளதுடன், குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்வதற்கு 06 மாத சலுகைக் காலமும் வழங்கப்பட்டிருந்தது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானத்திற்கு இணங்க தாமதக் கட்டணத்தை திருத்தங்களுக்கான அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், எதுவித தாமதக் கட்டணமும் இதுவரை அறவீடு செய்திருக்கவில்லை. | அதன்படி, எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2017 ஜனவரி 30 திகதி முதல் 2027 ஜனவரி 29 திகதி வரை 10 வருட காலப் பகுதிக்காக கொத்மலை தேயிலைச் சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் தனியார் கம்பனி ஒன்றுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கைக் காலம் ஆரம்ப நாள் முதல் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவதற்கு இரண்டு மாத கால சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 திகதி அளவில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த நிலுவை முகாமைத்துவக் கட்டணத் தொகை ரூபா 39,843,000 தொகை (தாமதக் கட்டணம் இன்றி) காணப்பட்டதுடன், 2024 ஜூன் 30 திகதி அளவில் குத்தகையாளரினால் ரூபா 4,617,000 தொகை அதாவது அறவிடப்பட வேண்டிய தொகையில் 11.6 சதவீதம் மாத்திரம் செலுத்தியிருந்தது. | அணுகியிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி செயற்படாமை மீது தொழிற்சாலையை மீண்டும் உரித்தாக்கி தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கொத்மலை தேயிலை சக்தித் தொழிற்சாலை இலங்கை மகாவலி அதிகாரசபையிலிருந்து அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியொன்றில் நிறுவப்பட்டுள்ளதுடன், 2017 – 2023 காலப் பகுதிக்காக ரூபா 7,059,744 தொகை தேயிலை சக்தி நிதியத்தினால் மகாவலி அதிகாரசபைக்கு குத்தகையாக செலுத்தியிருந்த போதிலும், இந்த ஆதனத்தை தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு கொடுத்தல் மூலம் முகாமைத்துவக் கட்டணம் என தேயிலை சக்தி நிதியத்திற்கு ரூபா 4,617,000 தொகை மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியத்தினால் காணிக்காக செலுத்தப்பட்ட குத்தகைத் தொகையை அணவல் செய்வதற்கு அல்லது போதிய முகாமைத்துவ கட்டணம் ஒன்று கம்பனியிலிருந்து அறவீடு செய்திருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. | நிலுவைத் தொகையையும் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் படி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு சொந்தமான ஆதனங்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | விதிக்கப்பட்டவாறு முகாமைத்துவக் கட்டணம் செலுத்தப்படாமையால் 2023 ஜனவரி 25 திகதி கொத்மலை தொழிற்சாலையை மீண்டும் நிதியத்திற்கு உரித்தாக்கிய பின்னர் குத்தகைக்கு கொடுத்திருந்த காலப் பகுதிக்குரிய குத்தகையாளர் செலுத்தியிருக்காத ரூபா 581,987 மின்சார பில் பத்திரமொன்று குறிப்பிட் குத்தகையாளரிடம அறவீடு செய்யாமல் நிதியத்தினால் செலுத்தியிருந்தது. | நிலுவை மின்சார பில் பத்திரம் மற்றும் ஏனைய அனைத்து நிலுவைத் தொகைகளையும் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கும் படி தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது. | குத்தகைதாரர் செலுத்தியிருக்காத அனைத்து நிலுவைத் தொகைகளையும் விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2017 ஏப்ரல் 28 திகதி மாவரல தோட்டத்தின் மற்றும் மாவரல தொழிற்சாலையின் முகாமைத்துவம் தனியார் கம்பனி ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதி அளவில் அந்தத் தோட்டம் மற்றும் தொழிற்சாலை தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மொத்த நிலுவை தவணைகளின் பெறுமதி முறையே ரூபா 11,022,500 தொகை மற்றும் ரூபா 30,030,750 தொகையாக காணப்பட்டது. | உடன்படிக்கையின் படி செயற்படாமையால் தொழிற்சாலையை 2023 ஆகஸ்ட் 15 திகதி மீண்டும் உரித்தாக்கியிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட அனைத்து நிலுவைத் தொகைகளையும் அறவீடு செய்வதற்கான சட்ட அலுவல்களை ஆரம்பிக்கும் படி அறிவித்து தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உரிய தகவல் அனுப்பப்பட்டுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாவரல தோட்டத்தை குத்தகைக்கு கொடுக்கும் போது அங்கு 100 ஏக்கர் நிலப் பரப்பில் 42 ஏக்கர் தேயிலைப் பயிர்ச் செய்கையொன்றும் மற்றும் தேயிலை நாட்டுமேடையொன்றும் அடங்கியிருந்ததுடன், குத்தகை உடன்படிக்கையின் 18 ஆவது பிரிவிற்கு இணங்க குத்தகை ஆதணத்தில் ஒரு வருடத்திற்கு 02 ஏக்கர்கள் வீதம் 12 ஏக்ர்களில் தேயிலை மீள் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டியதுடன், தேயிலைக் கன்றுகள் நடுவதற்காகவும் குத்தகை தரப்பினர் இணங்கியதுடன், குத்தகை தரப்பினர் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்படாமையால் மாவரல தோட்டம் 2023 ஆகஸ்ட் 15 திகதி மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. | மாவரல தோட்டக் காணி நிதியத்தினால் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துதல் அல்லது புதிய குத்தகை பெறுவோருக்கு வழங்கவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நிதியத்தினால் குத்தகை உடன்படிக்கைகள் மூலம் மேற்கூறிய ஆதனங்களை குத்தகைக்கு கொடுத்திருந்த போதிலும் 100 ஏக்கர் எல்லையில் எல்லை வரையறைகள் உரிய முறையில் நிலஅளவை செய்து நிலப் பகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்காமை மற்றும் அதன் காரணமாக வெளித் தரப்பினர்களினால் நிலப் பகுதியை பயன்படுத்துவதற்கு செயற்பட்டிருத்தல் தொடர்பாக 2021 ஆண்டில் | மாவரல காணியின் ஆரம்ப நில அளவைப் படம் காணாமல் போன காரணத்தினால் குறிப்பிட்ட தீர்த்தல் தாமதமடைந்ததுடன், தற்போது அந்த ஆரம்ப நில அளவைப் படம் தேயிலை சக்தி நிதியத்திடம் காணப்படுவதனால அதன்படி, தீர்த்தல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்வதற்கு | மாவரல தோட்ட காணியின் நில அளவை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு எல்லைகளை தீர்த்து காணிப் பகுதியை ஒதுக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட தொழிற்சாலையை குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக கணக்காய்வு ஐயவினாவில் கண்டறியப்பட்டிருந்த போதிலும் 2023 ஆண்டு இறுதி வரை எல்லைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (ஏ) | 2016 நவம்பர் 17 திகதி முதல் 2026 நவம்பர் 16 திகதி வரை 10 வருட காலத்திற்கான தனியார் கம்பனி ஒன்றிற்கு தெனியாய தேயிலை சக்திச் தொழிற்சாலை குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முகாமைத்துவக் கட்டணம் ரூபா 4,099,223 தொகை காணப்பட்டது. இந்த முகாமைத்துவக் கட்டணத்தை செலுத்தல் தொடர்பாக இரு தர்ப்பினர் இடையே மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் படி மாதாந்தம் செலுத்த வேண்டிய தவணை உட்பட ரூபா 01 மில்லியன் தொகை வீதம் முகாமைத்துவக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் தனியார் கம்பனி அவ்வாறு கொடுப்பனவு செய்திருக்கவில்லை. நிலுவை தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக நிதியத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் குத்தகை தொகையை செலுத்துவது தொடர்பாக வழங்கியிருந்த இணக்கப்பாட்டின் படி செயற்படும் படியும் மற்றும் அவ்வாறு செய்வதற்கு முடியாவிடின் குறிப்பிட்ட தொழிற்சாலையை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குத்தகைதாரர்களுக்கு தற்போது எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2017 ஏப்ரல் 11 திகதி முதல் 10 வருடங்களுக்காக பலாங்கொடை தேயிலை சக்தி தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் தனியார் தரப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,283,512 இற்கான தாமதக் கட்டணம் அல்லது திருத்திய தாமதக் கட்டணம் இதுவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தாமதக் கட்டண திருத்தத்திற்காக தற்போது அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவைத் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 2016 நவம்பர் 24 திகதி தனியார் தரப்பினர் ஒருவருக்கு கிழிமலை தேயிலைத் தொழிற்சாலையின் முகாமைத்துவம் 10 வருட காலப் பகுதிக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த தனியார் குத்தகை பெறுவோரினால் தொழிற்சாலையின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் தொடர்பாக முன்றாவது வெளித் தரப்பினர் ஒருவருடன் 2023 மார்ச் 20 திகதி | குறிப்பிட்ட உடன்படிக்கை துணைக் குத்தகை உடன்படிக்கையொன்று அல்ல எனவும், குத்தகைக்கு பெற்றவர் மற்றும் வேறொரு தரப்பினருடன் குறிப்பிட்ட தொழிற்சாலையை நடாத்திச் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த இணக்க உடன்படிக்கையொன்று மாத்திரமே. எவ்வாறாயினும், | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 2539 கொண்ட உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்தது. எவ்வாறாயினும், தொழிற்சாலையை நிதியத்திற்கு மீண்டும் உரித்தாக்கியிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை குத்தகை மற்றும் தாமதக் கட்டணம் முறையே ரூபா 16,651,911 தொகை மற்றும் ரூபா 167,414,915 தொகை காணப்பட்டது. | குறிப்பிட்ட குத்தகைக்கு பெறுவோர் அணுகியிருந்த குத்தகை உடன்படிக்கைளின் நிபந்தனைகளை மீறியிருந்தமையால் 2023 ஆகஸ்ட் 16 திகதி தொழிற்சாலை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. | |
| (ஓ) | எல்பிடிய தேயிலை சக்தி தொழிற்சாலையை குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக 2022 திசெம்பர் 31 திகதி அளவில் பெற வேண்டிய மொத்த நிலுவை முகாமைத்துவக் கட்டணத் தொகையில் 1/5 பகுதியாகிய ரூபா 559,000 தொகையை 2023 பெப்ரவரி 01 திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கும் மீதித் தொகையை சமமான 04 தவணைகளில் 04 மாதங்களுக்குள் 2023 ஜூன் 01 திகதிக்கு முன்னர் செலுத்தி முடிப்பதற்கும் அமைச்சுச் செயலாளரின் MPI/TSF/ACC/EIP/FAC மற்றும் 2023 ஜனவரி 17 திகதிய நிலுவை முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் தொடர்பான குழுக் கலந்துரையாடலின் படி தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் ரூபா 1,096,500 தொகை மாத்திரம் நிதியத்திற்கு கிடைத்திருந்ததுடன், குத்தகை செலுத்துவது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஒரு நாளைக்கு 1% அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணத் தொகையை அறவீடு செய்யும் நிபந்தனைகளை திருத்துவதற்காக தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளமையால அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவை முகாமைத்துவக் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2016 திசெம்பர் முதல் 2026 திசெம்பர் வரையான 10 வருட காலத்திற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு தெரனியகல தேயிலை சக்திச் தொழிற்சாலை குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் குத்தகைத் தொகை ரூபா 13,328,395 தொகை காணப்பட்டது. நிலுவைக் குத்தகை செலுத்துதல் தொடர்பாக இரு தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த இணக்கப்பாட்டின் படி மாதாந்தம் ரூபா 425,000 தொகை வீதம் கட்டணப் | 2024 ஒக்தோபர் 25 திகதி நடைபெற்ற தேயிலை சக்தி நிதியம் தொடர்பான பரிந்துரைகள் வழங்குவதற்கு நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவிற்கு குத்தகைதாரரை அழைத்து கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் , அங்கு தவணைகளாக குறிப்பிட்ட நிலுவைத் தொகையை செலுத்துவதற்காக குத்தகைதாரரினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவைக் குத்தகை தொகையை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியொன்று நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆண்டின் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய குறிப்பிட்ட செலுத்த வேண்டிய கட்டணம் தனியார் கம்பனியினால் செலுத்தியிருக்காததுடன், நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக நிதியத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | |
| (க) | ரைகம்கோரள தேயிலை சக்தி தொழிற்சாலையை குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதி அளவில் பெற வேண்டிய மொத்த நிலுவை முகாமைத்துவக் கட்டணம் ரூபா 5,400,000 தொகையாக காணப்பட்டதுடன், அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை தாமதக் கட்டணத் தொகை ரூபா 3,396,033 தொகையாகும். நிலுவை முகாமைத்துவக் கட்டணம் செலுத்தல் தொடர்பான இணக்கப்பாட்டின் படி ஒரு மாதத்தில் ஒரு மில்லியன் தொகை நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் மாதம் முதல் அந்த தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஒக்தோபர் 25 திகதி நடைபெற்ற தேயிலை சக்தி நிதியம் தொடர்பாக பரிந்துரை வழங்கவதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவிற்கு குத்தகைதாரரை அழைத்து கலந்துரையாடப்பட்டதுடன், குறிப்பிட்ட தவணை பணத்திற்கு மேலதிகமாக ரூபா 300,000 தொகை வீதம் நிலுவை குத்தகைத் தொகையின் பகுதியாக மாதாந்தம் செலுத்துவதற்கு குத்தகைதாரர் இணங்கப்பட்டுள்ளது. அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அமப/24/1984/716/002 இலக்கம் கொண்ட 2024 ஒக்தோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலுவைத் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ங) | 2006, 2007 காலப் பகுதியில் முடிவுற்ற தேயிலை விற்பனையின் மூலம் தனியார் கம்பனியொன்றிடம் இருந்து ரூபா 19,211,584 தொகை மற்றும் இறுதிக் கட்டளை வரை சட்டரீதியான வட்டி அறவீடு செய்தல் தொடர்பான வழக்கு தேயிலை சக்தி நிதியத்திற்கு அனுகூலமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் எதிர்த் தரப்பினரினால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்தத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேல்முறையீட்டுக் கட்டளை 2025 ஜனவரி 08 திகதி வழங்கப்படவுள்ளதுடன், அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | மேன்முறையீட்டு தீர்ப்பிற்கு இணங்க பணம் அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ச) | தேயிலை சக்தி நிதியத்தினால் தனியார் துறைக்கு சொந்தமான செயற்படாத தேயிலைத் தொழிற்சாலைகளை செயற்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 18.5 வருடாந்த வட்டித் தொகைக்கு ஒரு தொழிற்சாலைக்கு ரூபா 700,000 தொகை வீதம் கடன்தொகையொன்று 2001 ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. 06 தனியார் தேயிலை தொழிற்சாலைகளினால் கடன் தொகையை மற்றும் வட்டியை உடன்படிக்கையின் பிரகாரம் | குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக கடன் தொகையை அறவீடு செய்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | 20 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கடன் தொகையாக காணப்படுவதால் வழக்குத் தீர்ப்புக்கு இணங்க தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தாமதம் இன்றி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தியிருக்காமையால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 4,963,162 தொகையாக காணப்பட்டது. | | |
| (ஞ) | தேயிலை சக்தி காணிகளின் எல்லைகளை சரியாக இனங்கண்டு நில அளவை செய்திருக்காமையால் அங்கீகாரம் இன்றி வதிவோரிடமிருந்து அந்தக் காணிகளை தீர்த்துக்கொள்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான காணிகளின் எல்லைகளை தீர்த்துக்கொள்வதற்கு தேவையான நில அளவை அலுவல்கள் மேற்கொள்வதற்கு ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான ஆதனங்களை சரியாக நில அளவை செய்து தீர்த்துக்கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ட) | பலாங்கொடை தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான 8.2 பர்சஸ் எண்ணிக்கையொன்று அங்கீகாரம் இன்றி பிடிக்கபட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எதுவித சட்ட நடவடிக்கையும் நிதியத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பலாங்கொடை தொழிற்சாலை வளவில் அங்கீகாரம் இன்றி வதிவோருக்கு எதிராக தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகாரசபையினால் 2007 ஆண்டின் போது தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று காணப்படுவதனால் தொழிற்சாலை வளவினை நில அளவை அலுவல்கள் மேற்கொள்ள முடியாமல் இருப்பதுடன், குறிப்பிட்ட தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் நில அளவை மேற்கொண்டு அங்கு வேறு அங்கீகாரமின்றி அனுபவிப்பவர்கள் இனங்காணப்பட்டால் அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | வழக்குத் தீர்ப்புக்கு இணங்க நிதியத்திற்கு சொந்தமான ஆதனங்களை தீர்த்துக்கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ண) | தேயிலை சக்தி நிதியத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான 53-4601 மற்றும் 53-4435 இலக்கங்களை கொண்ட கப் வண்டிகளின் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத காலப் பகுதிக்காக 2021 திசெம்பர் 31 திகதி வரையான சலுகைக் காலம் வழங்கக்கூடிய சலுகையின் படி நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் முறையே ரூபா 93,125 தொகை மற்றும் ரூபா 95,550 தொகை காணப்பட்ட போதிலும், அந்தக் காலப் பகுதியில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் 02 கப் வண்டிகளுக்காக முறையே ரூபா | கப் வண்டிகள் ஓட்ட நிலையில் காணப்படவில்லை. அந்த வாகனங்களுக்காக 2003 ஆண்டு முதல் வருமானம் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருக்காமையா ல் அந்த வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது சாட்டுதல் செய்வதற்கு முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும், வேறு ஏனைய வாகனங்கள் பெருந்தோட்ட அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு குறிப்பிட்ட நிறுவனத்தினால் 2021 ஆண்டின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் அந்த வாகனங்களை | சிக்கனமற்ற செலவுகள் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், வாகனங்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான பயன்படுத்துதல் அல்லது அப்புறப்படுத்துவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 186,690 தொகை மற்றும் ரூபா 180,385 தொகை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, தேயிலை சக்தி நிதியத்தினால் ரூபா 178,400 இற்கான சிக்கனமற்ற செலவொன்று மேற்கொண்டிருந்ததெனவும், 2008 / 2009 காலப் பகுதி முதல் அந்த கப் வண்டிகள் பயன்படுத்தப்படாமல் ஹொரன உர களஞ்சியத்தில் நிறுத்தப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | உரித்தாக்குவதற்கு வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தண்டம் செலுத்த நேரிட்டது. அதன்படி, வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டு அந்த வாகனங்களை பெருந்தோட்ட அமைச்சின் பெயரில் உரித்தாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு தேவையான செய்முறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. | |
| (த) | 58 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய நிலப் பரப்பொன்று காணப்படுகின்ற மாவரல தோட்டத்தை குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் தேயிலை கொழுந்து உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் குறை கொள்திறனுடனான தொழிற்சாலைகளின் பயன்பாட்டினை உகந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்கு மற்றும் குத்தகை வருமானத்தை அதிகரிப்பதற்கும் நிதியத்திற்கு இயலுமை காணப்பட்ட போதிலும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் இதுவரை எடுத்திருக்கவில்லை. | மாவரல தோட்டம் குத்தகைக்கு கொடுக்கும் போது காணியின் பயிர் செய்யப்படாத பகுதியை பயிர் செய்வதற்கான இணக்கப்பாடு மீதான உடன்படிக்கையொன்று அணுகியிருந்த போதிலும் குத்தகை பெறும் தரப்பினர் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறியமையால் மாவரல தோட்டம் மீண்டும் உரித்தாக்கப்பட்டது. எதிர் காலத்தில் தோட்டத்தை மீண்டும் வெளித் தரப்பினர்களுக்கு சாட்டுதல் செய்யும் சந்தர்ப்பத்தில் பயிர் செய்யப்படாத காணிகளை பயிர் செய்யும் இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | மாவரல தோட்டக் காணி சரியான மற்றும் முறையான உடன்படிக்கைகள் மீது புதிய குத்தகைக்காரருக்கு வழங்கப்பட்டு தேயிலை கொழுந்து உற்பத்தியை அதிகரித்து தொழிற்சாலையின் பயன்பாட்டினை உகந்த மட்டத்தில் பேணிச் செல்ல வேண்டியதுடன், குத்தகை உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் தொடர்பாக முறையான கண்காணிப்யொன்றும் காணப்பட வேண்டும். |